**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CMP NO. 574/2025**

**Witness No. 2**

**Date: 18.08.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. பரணி | சாதி | |
| தந்தை பெயர் | வாசுதேவன் | மதம் | |
| கிராமம் | புதுப்பாக்கம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **18th August 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>பிராமண வாக்குமூலம் :</u>**

1. **1** ஆம் புகார்தாரர் என்னுடைய கணவர். கடலூரை சேர்ந்த பார்த்திபன் என்பவர் சென்னையில் வசிக்கிறார். நான் கடந்த 2021 ஆம் ஆண்டு அவரிடம் ரூ.4,00,000/- கடனாக பெற்றிருந்தேன். அதற்காக என் கணவர் அவருடைய 12 நிரப்பப்படாத காசோலைகளை அவரிடம் கொடுத்திருந்தார். என்னுடைய நிரப்பப்படாத காசோலைகளையும் பிணையமாக கேட்டிருந்தார். என்னுடைய 14 காசோலைகளை இணையமாக கொடுத்திருந்தோம். நான் அந்த கடனில் சிறுக சிறுக 2023 ஆம் ஆண்டு

வரை ரூ.1,90,000/- வரையில் கொடுத்து விட்டேன்.

2. என் கணவர் கடந்த 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவரை அணுகி கடனை நிவர்த்தி செய்து விடுகிறேன் என்று சொன்னபோது அவர் ரூ.20,00,000/- கொடுத்தால் கடனை தீர்த்து விடலாம் என்று சொல்லி உள்ளார். என் கணவர் அவ்வளவு தொகை முடியாது என பார்த்திபனிடம் சொல்லியுள்ளார். இந்நிலையில் கடந்த 2024-ஆம் ஆண்டு ஜூலை மாதம் எனக்கும் என்னுடைய கணவருக்கும் கடலூரில் இருந்து மணிமாறன் என்ற பெயரில் எனக்கும் தீபிகா என்ற பெயரில் என் கணவருக்கு தனித்தனியே இரண்டு வழக்கறிஞர் அறிவிப்புக்கள் வந்தது.

3. அதில் என் கணவர் தீபிகாவிடம் இருந்து ரூ.24,00,000/- கடன் வாங்கியதாகவும் எனக்கு மணிமாறிடமிருந்து ரூ.30,00,000/- கடன் வாங்கியதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டு இருந்தது. என்னுடைய காசோலைகளை அவர்கள் வங்கியில் தாக்கல் செய்ததாகவும் அந்த காசோலைகள் திருப்பப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது. நாங்கள் அந்த இரண்டு நபர்களுக்கும் காசோலை கொடுக்கவில்லை. அந்த காசோலைகள் பார்த்திபிடம் கொடுத்தை மேற்கண்ட நபர்கள் தவறாக பயன்படுத்தி எங்களுக்கு அந்த அறிவிப்புகளை அனுப்பி உள்ளனர். **(16/08/2024 தேதியிட்ட மணிமாறன் என்பவரிடம் இருந்து வந்த காசோலை நகலை தாக்கல் செய்கிறேன்)** எனவே நான் என்னுடைய வழக்கறிஞர் மூலமாக மேற்கண்ட நபருக்கு அவரை யார் என்று எனக்கு தெரியாது என்று சொல்லி பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். (0**2/09/2024 தேதியிட்ட வழக்கறிஞர் பதில் அறிவிப்பு தாக்கல் செய்கிறேன்)**

4. அது சம்பந்தமாக என் கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். இந்நிலையில் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் இருந்து என் கணவரை விசாரணைக்காக அழைத்து இருந்தார்கள். பார்த்திபனையும் விசாரணைக்காக அழைத்து இருந்தார்கள். அவர் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டு சென்று விட்டார். எனவே போலீசார் அந்த விசாரணையை முடித்து விட்டார்கள். இதனிடையே கடலூர் நீதிமன்றத்தில் இருந்து மணிமாறன் என் மீது காசலை மோசடி வழக்கு தாக்கல் செய்ததாக அழைப்பானை வந்தது. (**அந்த தனி நபர் புகார் நகலை தாக்கல் செய்துள்ளேன்)** எனவே என்னுடைய காசோலையை தவறாக பயன்படுத்திய மேற்கண்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக நான் இந்த தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் மீது தனி நபர் புகாரை கோப்பிற்கு எடுத்து அவர்களுக்கு அழைப்பானை சார்வு செய்து உரிய தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S/d.K.Nilavarasan, 18.08.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CMP NO. 574/2025**

**Witness No. 1**

**Date: 18.08.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. விஜய் ஆனந்த் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | அர்ஜூனன் | மதம் | |
| கிராமம் | புதுப்பாக்கம் | தொழில் | |
| வட்டம் | திருப்போரூர் | வயது | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **18th August 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**பிராமண வாக்குமூலம் :**

1. கடலூரை சேர்ந்த பார்த்திபன் என்பவர் சென்னையில் வசிக்கிறார். நான் கடந்த 2021 ஆம் ஆண்டு அவரிடம் ரூ.4,00,000/- கடனாக பெற்றிருந்தேன். அதற்காக அவர் என்னுடைய 12 நிரப்பப்படாத காசோலைகளை அவரிடம் கொடுத்திருந்தேன். என்னுடைய மனைவி இரண்டாம் புகார்தாரரின் நிரப்பப்படாத காசோலைகளையும் இணையமாக கேட்டிருந்தார்.அவரது 14 காசோலைகளை இணையமாக கொடுத்திருந்தேன். நான் அந்த கடனில் சிறுக சிறுக 2023 ஆம் ஆண்டு வரை

ரூ.1,90,000/– வரையில் கொடுத்து விட்டேன்.

2. நான் கடந்த 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவரை அணுகி கடனை நிவர்த்தி செய்து விடுகிறேன் என்று சொன்னபோது அவர் ரூ.20,00,000/– கொடுத்தால் கடனை தீர்த்து விடலாம் என்று சொன்னார். நான் கொஞ்சம் பார்த்து சொல்லுங்கள் என்று கேட்டபோது அவர் என்னை கடுமையாக பேசியதால் நான் அப்போதைக்கு அந்த பேச்சுவார்த்தையை நிறுத்தி விட்டேன். இந்நிலையில் கடந்த 2024–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எனக்கும் என்னுடைய மனைவிக்கும் கடலூரில் இருந்து மணிமாறன் என்ற பெயரில் என்னுடைய மனைவிக்கும் தீபிகா என்ற பெயரில் எனக்கும் தனித்தனியே இரண்டு வழக்கறிஞர் அறிவிப்புக்கள் வந்தது.

3. அதில் நான் தீபிகாவிடம் இருந்து ரூ.24,00,000/– கடன் வாங்கியதாகவும் என்னுடைய மனைவி மணிமாறிடமிருந்து ரூ.30,00,000/– கடன் வாங்கியதாகவும் நான் பார்த்திபிடம் கொடுத்திருந்த காசோலைகளை மேற்கண்ட நபர்கள் தவறாக பயன்படுத்தி எனக்கு அந்த அறிவிப்புகளை அனுப்பி உள்ளனர். (**தேதியிடப்படாத தீபிகா என்பவரிடம் இருந்து வந்த காசோலை நகலை தாக்கல் செய்கிறேன்)** எனவே நான் என்னுடைய வழக்கறிஞர் மூலமாக மேற்கண்ட நபருக்கு அவரை யார் என்று எனக்கு தெரியாது என்று சொல்லி பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன்.

4. அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். இந்நிலையில் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் இருந்து என்னை விசாரணைக்காக அழைத்து இருந்தார்கள். பார்த்திபனையும் விசாரணைக்காக அழைத்து இருந்தார்கள். அவர்

நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டு சென்று விட்டார். எனவே போலீசார் அந்த விசாரணையை முடித்து விட்டார்கள். இதனிடையே கடலூர் நீதிமன்றத்தில் இருந்து தீபிகா என் மீது காசலை மோசடி வழக்கு தாக்கல் செய்ததாக அழைப்பானை வந்தது. அந்த தனி நபர் புகார் நகலை தாக்கல் செய்துள்ளேன். எனவே என்னுடைய காசோலையை தவறாக பயன்படுத்திய மேற்கண்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக நான் இந்த தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் மீது தனி நபர் புகாரை கோப்பிற்கு எடுத்து அவர்களுக்கு அழைப்பானை சார்வு செய்து உரிய தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

S/d.K.Nilavarasan, 18.08.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.